# தேசிய வருமானமும் செலவும்

## பொதுவான போக்குகள்

1993 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ. உ. உ.) 1982 இன் நிலையான விலைகளில் 6.9 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சாதகமான வானிலை நிலைமைகள், தேசிய சேமிப்புகள் மற்றும் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காரணமாக முதலீட்டில் ஏற்பட்ட வளர்ச்சி, முன்னேற்றமடைந்த உலகப்பொருளாதாரம், உள்நாட்டு மூலதனச் சந்தையின் பரந்த சர்வதேச அங்கீகாரம் என்பன 1977 இல் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியின் இரண்டாவது உயர்ந்த மட்டத்தை இலங்கை அடையக்கூடிய விதத்தில் சாதகமாகப் பங்களித்தன. 1978 இன் வளர்ச்சி மட்டுமே 1993இல் அடையப்பட்ட வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டது. தேறிய காரணி வருவாயின் வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் 1993 இல் மொத்தத் தேசிய உற்பத்தி 1992 இன் 4.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.6 சதவீதத்தினால் வளர்ச்சியடையக் காரணமாயிற்று.

1993 இன் பொதுவான வளர்ச்சிக்கு, அனைத்துத் துணைத்துறைகளும் சாதகமாகப் பங்களித்துள்ளமையை பொருளாதாரத்தின் துறைரீதியான பகுப்பாய்வு எடுத்துக்காட்டியது. முன்னைய ஆண்டினைப் போன்றே, வளர்ச்சிக்கான மிகப்பெரும் பங்காளராகத் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகள் விளங்கின. எனினும் 1992 இனைப் போலன்றி, வேளாண்மைத்துறையும் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்துள்ளது.

பொதுவான தயாரிப்புத்துறை 1992 இன் 8.8 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு எதிராக 1993 இல் 10.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இத்துறை தொழிற்சாலைக் கைத்தொழில்களின் தொடர்ச்சியான வளர்ச்சியினால் மட்டுமன்றி ஏற்றுமதிப் பதனிடல் கைத்தொழில்களின் (தேயிலை, இறப்பர், தெங்குப் பதனிடல்) மீட்சியினாலும் உந்தப்பட்டது. 1993 இன் மொத்தத் தேசிய உற்பத்தியின் மொத்த வளர்ச்சியில் நான்கிலொரு பங்கிற்கும் சிறிதளவு கூடுதலான அளவிற்குப் பங்களித்த இத்துறையிலேற்பட்ட வளர்ச்சி, 1993 இல் சிஎஉ நியதிகளில் 9.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளாண்மை ஏற்றுமதிகளிலும், சிஎஉ நியதிகளில் 20 சதவீதத்தினால் அதிகரித்த கைத்தொழில் ஏற்றுமதிகளிலும் பிரதிபலித்தது.

1992 இல் 1.6 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்த வேளாண்மைத்துறை 1993 இல் 4.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சாதகமான வானிலை நிலைமைகள் தேயிலைத் துணைத்துறை மீட்சியடையவும் நெல்துணைத்துறையில் உயர்ந்த வளர்ச்சி ஏற்படவும் வழியமைத்தன. 1992 இல் நிலவிய கடும் வரட்சியின் காலங்கடந்த தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட தெங்குத் துணைத்துறை மாத்திரம் வெளியீட்டில் வீழ்ச்சியைக் காட்டியது. மீன்பிடி மரக்கலங்களில் செய்யப்பட்ட அதிகரித்த முதலீடுகளின் உதவியினால் 1993 இல் மீன்பிடித் துணைத்துறை 7 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சி கண்டது.

இரண்டு ஆண்டுகளாக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டிய சுரங்கம் அகழ்தல், கல்லுடைத்தல்துறை 1993 இல் மீட்சியுற்று ஏறத்தாழ 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கனிப்பொருள் ஏற்றுமதிகளில் முக்கியமாக இரத்தினக்கற்களின் ஏற்றுமதியில் சிஎஉ நியதிகளில் ஏற்பட்ட ஏறத்தாழ 22 சதவீதம் கொண்ட வளர்ச்சி, மற்றும் கட்டடவாக்கத்துறை தொடர்ச்சியாக விரிவடைந்தமை என்பன சுரங்கம் அகழ்தல், கல்லுடைத்தல் துறையின் திருந்திய செயலாற்றத்திற்கான ஏதுக்காரணிகளாக விளங்கின.

கட்டடவாக்கத்துறை 1992 இலும் பார்க்க சிறிதளவு மெதுவான வேகத்தில் காணப்பட்டபோதும் 1993 இல் தொடர்ந்தும் விரிவடைந்தது. தொழிற்சாலைக் கட்டடங்கள் மற்றும் வதிவிடக் கட்டடங்களின் மீதான அதிகரித்த கட்டடவாக்க வேலைகளே இத்துறையின் வளர்ச்சிக்கான மூலங்களாக விளங்கின. கட்டடவாக்கம் நீங்கலான பொதுவான பணிகள்துறை முன்னைய ஆண்டின் 5.3 சதவீதங்கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் 6.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

பொதுவான பணிகள் துறையில் மொத்த விற்பனை, சில்லறை விற்பனை வர்த்தகத்துறை 8.3 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்ததனால் 1993 இல் மொ. உ. உற்பத்தியின் அதிகரிப்பிற்கு உதவிய இரண்டாவது மிக முக்கிய துறைவாரியான பங்களிப்பாளராக இது விளங்கியது. இறக்குமதிகளில் ஏற்பட்ட 15.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியும் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 17.4 சதவீதங்கொண்ட வளர்ச்சியும் (இரண்டும் சிஎஉ நியதிகளில்) வர்த்தகத்தின் அதிகரித்த வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கின.

1993 இல் காணப்பட்ட கடும் மழைவீழ்ச்சி நீர்மின்வலுவின் அதிகரித்த உற்பத்திக்கு வழியமைத்தது. இது குழாய் மூலமான நீரின் வழங்கல் வலையமைப்புவிரிவடைந்தமையுடன் சேர்ந்து மின்வலு, வாயு நீர்மற்றும் நலப்பணிகள் துறை வளர்ச்சி 1993 இல் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக வளர்ச்சியடையக் காரணமாயிற்று.

திடீர் வளர்ச்சியுற்ற பங்குச்சந்தை, உயர்ந்த உள்நாட்டு வட்டி வீதங்கள், அதிகரித்துச் செல்லும் நிதியியல் நடவடிக்கை என்பன பொருளாதாரத்தின் மற்றைய துறைகளில் ஏற்பட்ட விரிவுடன் இணைந்து 1993 இல் வங்கித் தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத்துறை 10.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைய உதவியது.

நிலையான காரணிச் செலவு விலைகளில் (1982) மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொஉஉ) ரூ. 150.8 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 6.9 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. 1993 இல் நிலையான காரணிச் செலவு விலைகளில் (1982) மொத்தத் தேசிய உற்பத்தி (மொதேஉ) ரூ. 148.5 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 1992 இனைவிட 7.6 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. 1993 இல் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாயின் வெளிப்பாய்ச்சல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மொ. தே. உற்பத்தியின் உயர்ந்த வளர்ச்சிக்கு வழியமைத்தது. அதிகரித்த முதலீடுகள் இடம்பெற்றபோதும் 1993 இல் முதலீட்டு வருவாயின் வெளிப்பாய்ச்சல் 1992 இன்

அதே மட்டத்திலேயே காணப்பட்டது. இலங்கை முதலீட்டுக்கான மிகச்சாதகமான சூழ்நிலையைக் கொண்டிருக்கிறது என்பதனை இது மிகத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. 1993 இல் வெளிநாட்டுக் கடன்பாடுகளின் பேரிலான வட்டிக் கொடுப்பனவுகளும் வீழ்ச்சியடைந்தன. மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பு 1993 இன் வட்டி வருவாயில் தொடர்பான அதிகரிப்பினை ஏற்படுத்தியது. இக்காரணிகள், காரணிவருவாயின் தேறிய வெளிப்பாய்ச்சல் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைவதற்குப் பங்களித்தன.

1993 இல் நடைமுறைக்காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உற்பத்தி ரூ. 447 பில்லியன்கள் என மதிப்பிடப்பட்டு 1992 இன் ரூ. 379 பில்லியன்கொண்ட மட்டத்தினைவிட 18.0 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இதன்விளைவாக பொருளாதாரத்தில் பொதுவான விலைமாற்றங்களை அளவிடும் மொ. தே. உற்பத்தி உள்ளடக்க விலைச் சுருக்கி 1992 இன் 10.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 9.7 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மாறாக, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு, நுகர்வோர் விலை மட்டங்கள் 1992 இன் 11.4 சதவீதத்திற்கெதிராக 1993 இல் 11.7 சதவீதத்தினால் விரைவாக உயர்வுற்றன. 1993 இல் மொ. உ. உற்பத்திச் சுருக்கி சார்புரீதியில் குறைவான அதிகரிப்பினைக் கொண்டிருந்தமைக்கு ஏற்றுமதிகளுக்கான தாழ்ந்த விலை அதிகரிப்புக்கள் காரணமாக விளங்கின.

1993 இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 176.2 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, 1993 இல் நடைமுறைக்காரணிச் செலவு விலைகளில் தலைக்குரிய மொ. தே. உற்பத்தி ரூ. 25,389 (ஐ. அ. டொலர் 526) என மதிப்பிடப்பட்டதுடன் இது 1992 இல் பதிவுசெய்யப்பட்ட தொகையான ரூ. 21,786 (ஐ. அ. டொலர் 497) இனைவிட 16.5 சதவீதம் அதிகமானதாகும். 1993 இல் உண்மை நியதிகளில் தலைக்குரிய மொ. தே. உற்பத்தி 6.2 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

பொருளாதாரத்தில் பன்னாட்டு வர்த்தகத்தின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தின் நோக்கில், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளின் சார்புரீதியான விலைகளில் அதாவது வர்த்தகமாற்று விகிதத்தில் ஏற்படும் எந்த மாற்றமும் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருக்கும். எனவே இச்சார்புரீதியான விலைகளில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கத்தினை மதிப்பிடுவது முக்கியமானதாகின்றது. நாட்டின் உண்மையான மொ. தே. உற்பத்தியின் கொள்வனவுச் சக்தியாக மதிப்பிடப்படும் உண்மைத் தேசிய வருமானத்தின் நியதிகளில் இத்தாக்கத்தினை அளவிட முடியும். 1993 இல் பொதுவான வர்த்தகமாற்று விகிதம் 2.1 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்தது. இதன் விளைவாக, வர்த்தகமாற்று விகிதத்தின் தாக்கத்திற்காகச் சீராக்கம் செய்யப்பட்ட உண்மை மொ. தே. உற்பத்தியான உண்மைத் தேசிய வருமானம் 1992 இன் 5.2 சதவீதங்கொண்ட அதிகரிப்பிற்கு எதிராக 1993 இல் 8.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

நடைமுறைக் காரணிச்செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தியை நேரில் வரிகளின் தாக்கத்திற்குச் சீராக்கம் செய்து உதவு தொகைகளைக் கழித்துப்

பெறப்படும் நடைமுறைச் சந்தை விலைகளிலான மொ. தே. உற்பத்தி 1992 இன் ரூ. 424 பில்லியனிலிருந்து 1993 இல் ரூ. 500 பில்லியனுக்கு 18 சதவீதத்தினால் அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 1992 இன் ரூ. 24,379 (ஐ. அ. டொலர் 556) இலிருந்து 1993 இல் ரூ. 28,395 இற்கு (ஐ. அ. டொலர் 588) 16.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

செலவுப் பக்கத்தில், நடைமுறைச் சந்தை விலைகளில் மொ. உ. செலவு 1993 இல் ரூ. 544 பில்லியன் என மதிப்பிடப்பட்டு 1992 இற்காக மதிப்பிடப்பட்ட ரூ. 465 பில்லியன் கொண்ட மட்டத்தினைவிட 17.1 சதவீதமான அதிகரிப்பினைக் காட்டியது. பெயரளவு நியதிகளில் நுகர்வுச்செலவு 15.2 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கையில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் 26.0 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டது. அரசதுறைபோன்றே தனியார்துறையிலும் நுகர்வு மற்றும் மூலதனவாக்கம் இரண்டும் 1992 இலும் பார்க்க விரைவான வேகத்தில் அதிகரித்தன.

1993 இல் உண்மை நியதிகளில் மொத்த நுகர்வுச் செலவு 1992 இன் 4.6 சதவீதங் கொண்ட வளர்ச்சிக்கு எதிராக 7.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மறுபுறத்தில் நிலையான மூலதனவாக்கம் 1992 இன் 4.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1993 இல் 13.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

1993 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ. உ. உற்பத்திக்கான முதலீட்டு விகிதம் 26 சதவீதமாக விளங்கியதுடன் இது 1992 இல் பதிவு செய்யப்பட்ட 24 சதவீதத்தினைவிட முன்னேற்றம் அடைந்தும் காணப்பட்டது. உண்மை நியதிகளில் முதலீடு 1992 இன் 5.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் 12.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 1993 இலும் முதலீட்டின் பெரும்பகுதி தனியார்துறையிலிருந்தே கிடைத்ததுடன் இது கட்டடவாக்கம், போக்குவரத்துக் கருவிகள், பொறித்தொகுதிகள் மற்றும் பொறிகள், தொடர்பூட்டல் என்பனவற்றில் மிகக்கூடுதலாக முதலீடு செய்தது. அரசதுறை முதலீடுகள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மின்வலு வழங்கல், அதிகரித்த போக்குவரத்து வசதிகளை வழங்கல் என்பனவற்றின்மீது செறிந்து காணப்பட்டது.

நடைமுறை நியதிகளில் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. 80 பில்லியன்கள் என மதிப்பிடப்பட்டதுடன் 1992 இன் மதிப்பீடான ரூ. 64 பில்லியனைவிட 25.6 சதவீதமான அதிகரிப்பினையும் கொண்டிருந்தன. உள்நாட்டுச் சேமிப்பு விகிதம் அதாவது நடைமுறைச் சந்தை விலைகளில் மொ. உ. உற்பத்திகளுக்கான உள்நாட்டுச் சேமிப்புக்கள் விகிதம் 1992 இன் 15 சதவீதத்திலிருந்து 1993 இல் 16 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது கடந்த சில ஆண்டுகளாக உள்நாட்டுச் சேமிப்புக்களில் காணப்பட்ட அதிகரித்த போக்கின் தொடர்ச்சியாகும். தேறிய தனியார் மாற்றல்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய்கள் என்பனவற்றிற்கான சீராக்கம் செய்யப்பட்ட உள்நாட்டுச் சேமிப்பான தேசிய சேமிப்புக்கள் ரூ. 102 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டு 1992 இன் மதிப்பீடான ரூ. 76 பில்லியனைவிட 33.1 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தன. தேசிய சேமிப்புக்கள் விகிதம் 1992 இன் 18 சதவீதத்திலிருந்து 1993 இல் 20 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## துறைவாரியான செயலாற்றம்

மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான செயலாற்றம் அட்டவணை 1.6 இல் தரப்பட்டுள்ளது. அனைத்துத்துறைகளும் பொருளாதாரத்திற்கு சாதகமான முறையில் பங்களித்ததன் மூலம் 1993 இல் மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைய உதவின. தயாரிப்புக்கள், மொத்த விற்பனை சில்லறை வர்த்தகம், வேளாண்மை என்பன வளர்ச்சிக்கு உதவிய மிக முக்கியமான பங்களிப்புத் துறைகளாக விளங்கின.

1992 இல் 1.6 சதவீதமான வீழ்ச்சியைக் கொண்டிருந்த மொத்த வேளாண்மை, காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித்துறை 1993 இல் 4.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மொத்த உற்பத்தியில் இத்துறையின் முக்கியத்துவத்தினை நோக்குகையில் இதன் மேம்பட்ட செயலாற்றம் 1993 இன் உயர்ந்த வளர்ச்சியை அடைவதற்கு மிகமுக்கியமானதாக இருந்ததுடன் மொ. தே. உற்பத்தியின் மொத்த வளர்ச்சியில் 14 சதவீதத்திற்கும் பங்களித்தது. வேளாண்மையின் அதிகரித்த வெளியீட்டிற்கு முக்கிய காரணம் 1993 இல் நிலவிய மிகச் சாதகமான வானிலை நிலைமைகளேயாகும். 1992 இன் கடுமையான வரட்சி நெல் உற்பத்தியின் மீது 2 சதவீத வீழ்ச்சியையும் அதே ஆண்டில் தேயிலை உற்பத்தியின் மீது 25.7 சதவீதங்கொண்ட கணிசமான வீழ்ச்சியையும் விளைவித்திருந்தது. 1993 இல் இந்நிலை மாற்றமடைந்து உற்பத்தியில் தேயிலை 29.6 சதவீதங்கொண்ட அதிகரிப்பினையும், நெல் 9.6 சதவீதங்கொண்ட அதிகரிப்பினையும் பதிவு செய்தன. 1993 இல் மற்றைய வேளாண்மைத் துணைத்துறைகளும் வளர்ச்சியில் உயர் மட்டங்களைப் பதிவு செய்தன. (1992 இன் 1.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.4 சதவீதம்) 1993 இல் காய்கறி உற்பத்தி வீழ்ச்சியைப் பதிவு செய்தபோதும் துணை உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், பழங்கள் மற்றும் கால்நடைத்தீன் உற்பத்திகள் என்பனவற்றின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சி இத்துறை வளர்ச்சியடைய இயலச் செய்தது. இறப்பர்த் துணைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி முன்னைய ஆண்டின் வளர்ச்சியிலிருந்து சிறிதளவு வீழ்ச்சியடைந்து 1993 இல் 1.8 சதவீதத்தினால் அதிகரித்தது. தெங்குத்துணைத்துறை மட்டும் 1993 இல் உற்பத்தியில் குறைவினைப் பதிவுசெய்து 5.8 சதவீத வீழ்ச்சியைக்காட்டியது. தெங்குப் பயிர்ச்செய்கையில் வரட்சியின் தாக்கம் வழமையாக ஏறத்தாழ ஓராண்டிற்குப் பின்பே உணரப்படுகிறது.

1993 இல் மீன்பிடித்துணைத்துறை முன்னைய ஆண்டின் 4.1 சதவீதங்கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சிக்கு நீண்டகாலம் கடலில் தங்கி மீன்பிடிப்பதற்கு மீன்பிடியாளர்களை இயலச்செய்த "பலநாள்" மீன்பிடிக்கலங்கள் கூடுதலாகக் கிடைத்தமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

அகழ்தலும் கல்லுடைத்தலும் துறை தொடர்ந்தும் இரண்டாண்டுகளாக வீழ்ச்சியடைந்த பின்னர் 1993 இல் குறிப்பிடத்தக்க சாதகமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு இரத்தினக்கல் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட எழுச்சியே முக்கிய காரணமெனினும் கல்லுடைத்தல் துணைத்துறையின் அதிகரித்த வெளியீட்டிற்கு வழியமைத்த கட்டடவாக்கத்துறையின் தொடர்ச்சியான வளர்ச்சியே இதனை

அட்டவணை 1.6

## (1982) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1991 – 1993

| வகை | கூட்டப்பட்ட பெறுமதி (ப.இ. ரூ.) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ப.இ. ரூ.) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991* | 1992* | 1993* | 1991* | 1992* | 1993* | 1992* | 1993* | 1992* | 1993* |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 30,570 | 30,090 | 31,554 | 23.1 | 21.8 | 21.2 | - 480 | 1,464 | -8.2 | 14.0 |
| 1.1 வேளாண்மை ... | 25,941 | 25,316 | 26,592 | 19.6 | 18.3 | 17.9 | -625 | 1,276 | -10.7 | 12.2 |
| 1.1.1 தேயிலை ... | 3,100 | 2.303 | 2,985 | 2.3 | 1.7 | 2.0 | -797 | 682 | -13.6 | 6.5 |
| 1.1.2 இறப்பர் ... | 655 | 669 | 681 | 0.5 | 0.5 | 0.5 | 14 | 12 | 0.2 | 0.1 |
| 1.1.3 தெங்கு ... | 2,827 | 2,971 | 2,799 | 2.1 | 2.2 | 1.9 | 144 | -172 | 2.5 | -1.6 |
| 1.1.4 நெல் ... | 6,002 | 5,882 | 6,447 | 4.5 | 4.3 | 4.3 | -120 | 565 | -2.0 | 5.4 |
| 1.1.5 ஏனையவை ... | 13,357 | 13,491 | 13,680 | 10.1 | 9.8 | 9.2 | 134 | 189 | 2.3 | 1.8 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 2,107 | 2,149 | 2,151 | 1.6 | 1.6 | 1.4 | 42 | 2 | 0.7 | 0.0 |
| 1.3 கடற்றொழில் ... | 2,522 | 2,625 | 2,811 | 1.9 | 1.9 | 1.9 | 103 | 186 | 1.8 | 1.8 |
| 2. சுரங்கம் அகழ்தலும், கல் உடைத்தலும் ... | 3,511 | 3,300 | 3,693 | 2.7 | 2.4 | 2.5 | -211 | 393 | -3.6 | 3.8 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 23,949 | 26,059 | 28,806 | 18.1 | 18.9 | 19.4 | 2,110 | 2,747 | 36.0 | 26.4 |
| 3.1 தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் பதனிடல் ... | 3,332 | 2,912 | 3,157 | 2.5 | 2.1 | 2.1 | -420 | 245 | -7.2 | 2.4 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் ... | 18,708 | 21,140 | 23,529 | 14.1 | 15.3 | 15.8 | 2,432 | 2,389 | 41.5 | 22.9 |
| 3.3 சிறு கைத்தொழில் ... | 1,065 | 1,150 | 1,208 | 0.8 | 0.8 | 0.8 | 85 | 58 | 1.5 | 0.6 |
| 3.4 ஏனையவை ... | 844 | 857 | 912 | 0.6 | 0.6 | 0.6 | 13 | 55 | 0.2 | 0.5 |
| 4. கட்டடவாக்கம் ... | 9,033 | 9,765 | 10,400 | 6.8 | 7.1 | 7.0 | 732 | 635 | 12.5 | 6.1 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,800 | 1,897 | 2,125 | 1.4 | 1.4 | 1.4 | 97 | 228 | 1.7 | 2.2 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 15,534 | 16,606 | 17,287 | 11.7 | 12.0 | 11.6 | 1,072 | 681 | 18.3 | 6.5 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 28,556 | 30,074 | 32,584 | 21.6 | 21.8 | 21.9 | 1,518 | 2,510 | 25.9 | 24.1 |
| 7.1 இறக்குமதி ... | 10,826 | 11,714 | 13,436 | 8.2 | 8.5 | 9.0 | 888 | 1,722 | 15.2 | 16.5 |
| 7.2 ஏற்றுமதி ... | 3,210 | 3,695 | 4,190 | 2.4 | 2.7 | 2.8 | 485 | 495 | 8.3 | 4.7 |
| 7.3 உள்நாடு ... | 14,520 | 14,665 | 14,958 | 11.0 | 10.6 | 10.1 | 145 | 293 | 2.5 | 2.8 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து .... | 6,831 | 7,241 | 8,023 | 5.2 | 5.2 | 5.4 | 410 | 782 | 7.0 | 7.5 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,761 | 3,795 | 3,841 | 2.8 | 2.7 | 2.6 | 34 | 46 | 0.6 | 0.4 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 6,304 | 6,449 | 6,642 | 4.8 | 4.7 | 4.5 | 145 | 193 | 2.5 | 1.9 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 5,355 | 5,714 | 5,828 | 4.1 | 4.1 | 3.9 | 359 | 114 | 6.1 | 1.1 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 135,204 | 140,990 | 150,783 | 102.3 | 102.1 | 101.5 | 5,786 | 9,793 | 98.7 | 93.9 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் | (2,990) | (2,916) | (2,284) | -2.3 | -2.1 | -1.5 | 74 | 632 | 1.3 | 6.1 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 132,214 | 138,074 | 148,499 | 100.0 | 100.0 | 100.0 | 5,860 | 10,425 | 100.0 | 100.0 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வலுவுறச் செய்தது. சிஎஉ நியதிகளில் இரத்தினக்கல் ஏற்றுமதிகள் 1992 இன் சிஎஉ 402 இலட்சங்களுக்கெதிராக 1993 இல் சிஎஉ 505 இலட்சங்களுக்கு அதிகரித்தமையின் காரணமாக 25.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தன.

பொதுவான பொருளாதார வளர்ச்சியில் தயாரிப்புத்துறை தொடர்ந்தும் மாபெரும் பங்களிப்பாளராக விளங்கி 1993 இல் மொதேஉ யின் உண்மையான வளர்ச்சியில் 26.4 சதவீதத்திற்கு வகைகூறியது. 1992 இல் இத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட 8.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் 10.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. தயாரிப்பில் அதிமுக்கிய துணைத்துறையான தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத்துறை கடந்த சில ஆண்டுகளாக விரிவடைந்ததைத் தொடர்ந்து 1993 இல் 11.3 சதவீதத்தால் வளர்ச்சியுற்றது. முதலீட்டுச் சபையின் எல்லைக்குள்ளும் அதற்குப் புறத்தேயுமான இரண்டிலும் உள்ள கைத்தொழில் முயற்சிகளான தொழிற்சாலைக் கைத்தொழில்களில் செய்யப்பட்ட ஏராளமான முதலீடு இத்துணைத்துறையைப் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பகுதியாக ஆக்கிவிட்டது. புடவைகளையும் அணியும் ஆடைகளையும் நோக்கியே தொழிற்சாலைக் கைத்தொழில்கள் பெருமளவிற்குக் கவரப்பட்டுள்ளன. 1993 இல் இவ்வகைக் கைத்தொழில்களின் வெளியீடு 30 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து, புடவைகளினதும் தைத்த ஆடைகளினதும் ஏற்றுமதிகள் சிஎஉ நியதிகளில் 17.4 சதவீதத்தால் அதிகரித்தன. 1993 இல் பொதுவான கைத்தொழில் ஏற்றுமதிகள் சிஎஉ நியதிகளில் 20 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தன. தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் என்பனவற்றின் பதனிடல் என்பன தொடர்பான கூட்டிய பெறுமதியை உள்ளடக்கிய ஏற்றுமதிப் பதனிடல் துணைத்துறையின் வளர்ச்சி மூலம் 1993 இல் தயாரிப்புத்துறையின் வளர்ச்சி மேலும் அதிகரித்தது. 1992 இல் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியால் பெருமளவு பாதிக்கப்பட்டு, இவ்வாண்டில் 12.6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்த இத்துணைத்துறை 1993 இல் 8.4 சதவீதத்தால் வளர்ச்சிபெற்றது. அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளுடன் தொழிற்சாலைக் கைத்தொழில்களிலும் அதேபோன்று சுற்றுலாக் கைத்தொழிலிலுமிருந்து கிடைத்த எதிர்பாராத நன்மைகளால் 1993 இல் சிறு கைத்தொழில் துணைத்துறை 5.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. நெல் உற்பத்தியால் பெருமளவு பயனுறும் ஏனையதுணைத்துறை நெல் விளைச்சலின் அதிகரிப்பின் விளைவாக 6.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

1993 இல் கட்டடவாக்கத்துறை தொடர்ந்து வளர்ச்சியடைந்ததாயினும் 1992 இன் வேகத்தினைவிட மெதுவான வேகத்திலேயே இருந்தது. இத்துறை முன்னைய ஆண்டின் 8.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் 6.5 சதவீதத்தினால் வளர்ச்சி பெற்றது. கட்டடவாக்க நடவடிக்கையிற் பெரும்பங்கு இவ்வாண்டிலும் தனியார்துறையிலேயே காணப்பட்டது.

ஒன்றுசேர்ந்த பணிகள்துறை 1992 இன் 5.3 சதவீத வளர்ச்சியிலிருந்து 1993 இல் 6.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. வர்த்தகம், நிதியியல், பயன்பாடுகள் ஆகியவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி இத்துறையின் பணிகள் மேலும் அதிகரிப்பதற்கு உதவியது. இவ்வாண்டின் கடும் மழைவீழ்ச்சி 1993 இல் நீர்மின்வலு உருவாக்கம் 31 சதவீதத்தினால் அதிகரிக்க உதவியது. குழாய்வழி நீர் வழங்கல் வலையமைப்பு அபிவிருத்தியுடன் வழங்கப்பட்ட நீரின் அளவு 26

சதவீதத்தால் அதிகரித்தது. இவற்றுடன் கைத்தொழில் மற்றும் வீட்டுப்பாவனைக்கான வாயு என்பனவற்றின் அதிகரித்த நிரம்பல் மின்வலு, வாயு, நீர், நலத்துறைப்பணிகள் துறையின் செயற்பாடுகளில் 12 சதவீதமான அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றது. இது 1992 இல் காணப்பட்ட 5.4 சதவீத வளர்ச்சி வீதத்தினைவிட இரு மடங்கிற்கும் கூடுதலானதாகும்.

1993 இல் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்துறை 4.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் மற்றும் உள்நாட்டு வேளாண்மை ஆகிய துணைத்துறைகளில் மேம்பட்ட செயலாற்றத்தினால் ஏற்பட்ட சரக்கு ஏற்றியிறக்கலின் அதிகரிப்பின் விளைவாகும். மேலும் தொடர்பூட்டல் வசதிகளும் விரிவடைந்து காணப்பட்டன.

1993 இல் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துறை 1992 இன் 5.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.3 சதவீதத்தால் வளர்ச்சியுற்றது. இத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு, இறக்குமதி வர்த்தகத் துணைத் துறையிலேற்பட்ட 14.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியும் ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறையில் ஏற்பட்ட 13.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியும் துணை புரிந்தன. குறிப்பாக வேளாண்மை மற்றும் கைத்தொழில்களில் ஏற்பட்ட அதிகரித்த உள்நாட்டு பொருளாதார நடவடிக்கையும் உள்நாட்டு வர்த்தகத் துணைத்துறையின் வெளியீடு அதிகரிக்கக் காரணமாக இருந்தது.

1993 ஆம் ஆண்டில் இலங்கையின் நிதியியற் சந்தைகள் திடீர் வளர்ச்சி நிலையில் இருந்தன. உதயமாகின்றதோர் நிதியியல் நிலையமாக உலக நாடுகள் பெருமளவில் ஏற்றுக்கொண்டமையினால் பட்டியலிடப்பட்ட முதலீடுகள், நேரடி முதலீடுகள் ஆகிய இரண்டும் அதிகரித்தன. தேறிய பட்டியலிடப்பட்ட முதலீடுகள் 1992 இன் சிஎஉ 184 இலட்சத்திலிருந்து 1993 இல் சிஎஉ 480 இலட்சத்திற்கு 160 சதவீதத்தினால் அதிகரித்தன.

1993 இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் சகல பங்கு விலைச்சுட்டெண் களும் 62 சதவீதத்தால் அதிகரித்தன. மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் பொருளாதாரத்தில் நிலவிய உயர்வட்டி வீதங்களும் நிதியியல்துறையில் இலாபத்தன்மை அதிகரிக்க உதவின. அதன் விளைவாக வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து எனும் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 1992 இன் 6.0 சதவீத உண்மை வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் உண்மை நியதிகளில் 10.8 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது.

ஆயினும், சுற்றுலாக் கைத்தொழில் எதிர்பார்த்த அளவுக்குச் சிறப்பாக நடைபெறவில்லை. ஆண்டின் முதற் சில மாதங்களில் கணிசமான வளர்ச்சி காணப்பட்டாலும் இவ்வுட்பாய்ச்சல் யூனின் பின்னர் ஓய்ந்து கொண்டுவந்தமை அவதானிக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் இரவுகளினது எண்ணிக்கை அதிகரித்திருந்தபோதிலும் 1992 தொடக்கம் 1993 வரையும் அப்பயணிகளின் மொத்த எண்ணிக்கையில் பொதுவாகச் சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டது. ஆகவே பணிகள் (வே. எ. கு.) துறை முன்னைய ஆண்டின் 6.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் மிதமாக 2.0 சதவீதத்தால் மட்டுமே வளர்ச்சிபெற்றது.

## செலவு

நடைமுறைச் சந்தை விலைகளில், மொத்த உள்நாட்டுச் செலவு (மொ. உ. செ.) ரூ. 544 பில்லியனாக மதிப்பிடப்பட்டு, 1992 இற்காக மதிப்பிடப்பட்ட ரூ. 465 பில்லியனைவிட 17.1 சதவீதம் அதிகரித்திருந்தது. 1992 இலும் பார்க்க 1993 இல் நுகர்வு, முதலீடு ஆகிய இரண்டிலும் பெருமளவு வளர்ச்சி காணப்பட்டது. நுகர்வுச் செலவு ரூ. 416 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 15.2 சதவீத அதிகரிப்பினைக் காட்டிய வேளையில் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1993 இல் 23.9 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 128 பில்லியனாக விளங்கியது.

தனியார் நுகர்வு, அரச நுகர்வு ஆகிய இரண்டும் 1992 இனைவிட துரிதமான வேகத்தில் வளர்ச்சியடைந்தன. தனியார் நுகர்வு ரூ. 370 பில்லியன் மட்டத்தை அடையும் வகையில் 15.4 சதவீதத்தால் (1992 இல் 11.2 சதவீதம்) வளர்ச்சியுற்றவிடத்து அரசநுகர்வு ரூ. 47 பில்லியன் மட்டத்திற்கு 13.6 சதவீதத்தால் (1992 இல் 11.8 சதவீதம்) வளர்ச்சியடைந்தது. தனியார் நுகர்வில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மீதான செலவைவிட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள், காரணியல்லாப் பணிகள் மீதான செலவு உயர்மட்டத்தில் அதிகரித்திருந்தது. இது, 1992 இல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள், காரணியல்லாப் பணிகள் மீதான செலவு சிறிதளவால் 0.9 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்த நிலைக்கு மாறானதாகும். 1993 இல் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் காரணியல்லாப் பணிகள் மீதான செலவு 17.9 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற் பெரும்பகுதி சொந்தப் பாவனைப் பொருட்களின் இறக்குமதிகளாகக் காணப்பட்டவிடத்து, உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள், பணிகள் மீதான தனியார் நுகர்வுச்செலவு 1992 இன் 15.3 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 14.5 சதவீதத்தால் அதிகரித்தது.

இருப்புக்களின் மாற்றங்களை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1993 இல் ரூ. 128 பில்லியனாக விளங்கி, 1992 இன் 21.2 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 23.9 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கையர், வெளிநாட்டார் ஆகிய இருசாராராலும் பொருளாதாரத்திற் செய்யப்பட்ட மேலதிக முதலீடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் நடைமுறைச் சந்தை விலைகளிலே மொ. உ. உ இற்கு மொ. உ. மூ. ஆக்கத்தின் விகிதம் 1992 இன் 24 சதவீதத்திலிருந்து 1993 இல் 26 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1993 இல் அரச துறையாலும் கணிசமான முதலீடு செய்யப்பட்டபோதிலும் கடந்த அண்மைக்காலத்திற்போன்றே தனியார்துறை தொடர்ந்தும் ஆதிக்கமான முதலீட்டாளராக விளங்கியது. 1993 இல் வதிவு மற்றும் வதிவில்லா கட்டடவாக்கம், போக்குவரத்து உபகரணமும் பொறிகளும், தொடர்பூட்டல்களும் பொறித்தொகுதிகளும் ஆகியவற்றைப் பாரிய முதலீட்டுத்துறைகளாகக் கொண்டு தனியார்துறை முதலீடு 17.5 சதவீதத்தால் அதிகரித்தது. திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி 1992 இல் ஏறத்தாழ 14 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்த அரசதுறை முதலீடு 1993 இல் 65 சதவீதத்திற்கும் கூடுதலான அதிகரிப்புடன் பெரும் எழுச்சிபெற்றது. போக்குவரத்து மற்றும் மண் கொண்டுசெல்லும் உபகரணங்கள், புகைவண்டிப் போக்குவரத்துக்கான பொறித்தொகுதி என்பனவற்றில் செய்த ஏராளமான முதலீடும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மின்வலு உருவாக்கம் மற்றும் வழங்கல் ஆகியவற்றில் மேலும் செய்யப்பட்ட முதலீடும் அரசதுறை முதலீட்டில் முக்கிய துறைகளாக விளங்கின.

*அட்டவணை 1.7*

**மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1982 - 1993**

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ. ரூ.) | | | | 1982 விலைகளில் | | | | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1991* | 1992* | 1993* | 1982 | | 1991* | | 1992* | | 1993* | | 1991 இற்கு மேலாக 1992 | 1992 இற்கு மேலாக 1993 |
| | | | | | தொகை ப.இ.ரு | % | தொகை ப.இ.ரு | % | தொகை ப.இ.ரு | % | தொகை ப.இ.ரு | % | | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 145,143 | 517,019 | 599,791 | 713,029 | 145,143 | 100 | 202,492 | 100 | 215,077 | 100 | 235,016 | 100 | 6.2 | 9.3 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் .. | 99,238 | 372,345 | 425,283 | 496,485 | 99,238 | 68 | 141,895 | 70 | 147,996 | 69 | 158,208 | 67 | 4.3 | 6.9 |
| 1.2 பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் .. | 45,905 | 144,674 | 174,508 | 216,544 | 45,905 | 32 | 60,597 | 30 | 67,081 | 31 | 76,808 | 33 | 10.7 | 14.5 |
| 2. பயன்பாடு ... | 145,143 | 517,019 | 599,791 | 713,029 | 145,143 | 100 | 202,492 | 100 | 215,077 | 100 | 235,016 | 100 | 6.2 | 9.3 |
| 2.1 நுகர்வு ... | 87,468 | 324,847 | 361,438 | 416,301 | 87,468 | 60 | 124,719 | 62 | 130,412 | 61 | 139,541 | 59 | 4.6 | 7.0 |
| 2.2 மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 30,279 | 84,206 | 100,039 | 126,070 | 30,279 | 21 | 33,906 | 17 | 35,399 | 16 | 40,231 | 17 | 4.4 | 13.7 |
| 2.2.1 அரசு ... | 4,866 | 15,838 | 13,632 | 22,419 | 4,866 | 3 | 5,667 | 3 | 4,165 | 2 | 5,973 | 3 | -26.5 | 43.4 |
| 2.2.2 கூட்டுத்தாபனங்கள் } 2.2.3 தனியார்துறை } | 25,413 | 68,368 | 86,407 | 103,651 | 25,413 | 18 | 28,239 | 14 | 31,234 | 15 | 34,258 | 15 | 10.6 | 9.7 |
| 2.3 இருப்புக்களில் மாற்றம் ... | 248 | 950 | 3,200 | 1,800 | 248 | _ | 201 | _ | 622 | _ | 325 | _ | 209.5 | -47.7 |
| 2.4 பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 27,148 | 107,016 | 135,114 | 168,858 | 27,148 | 19 | 43,666 | 22 | 48,644 | 23 | 54,919 | 23 | 11.4 | 12.9 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இலங்கை தொடர்ந்தும் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரத்தக்கதாக விளங்கியது. 1992 இல் சிஎஉ 860 இலட்சமாக விளங்கிய தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடு 1993 இல் சிஎஉ 1,340 இலட்ச மட்டத்தை அடைந்து 55.8 சதவீதத்தால் அதிகரித்தது. 1993 இல் பட்டியலிடப்பட்ட முதலீடு, நேரடி முதலீடு ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய பொதுவான தேறிய தனியார் முதலீடு சிஎஉ 1,820 இலட்ச மட்டத்தை அடைந்து 74.4 சதவீதத்தால் அதிகரித்தது.

## மூலவளங்களின் கிடைத்தலும் பயன்பாடும்

1993 இல் மொத்த உள்நாட்டு உற்பத்திகளையும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினது இறக்குமதிகளையும் உள்ளடக்கிய பொருளாதாரத்தின் பயன்பாட்டுக்காக கிடைத்த மூலவளங்களின் மொத்தப் பெறுமதி 18.9 சதவீதத்தால் 1992 இன் ரூ. 600 பில்லியனிலிருந்து ரூ. 713 பில்லியனுக்கு அதிகரித்தது. 1992 இல் இது தொடர்பான அதிகரிப்பு 16.0 சதவீதமாக இருந்தது. 1993 இல் ஏற்பட்ட ரூ. 113 பில்லியன் கொண்ட மொத்த அதிகரிப்பு நடைமுறைச் சந்தை விலைகளில் மொ. உ. உ. இல் ஏற்பட்ட ரூ. 71 பில்லியன் கொண்ட அதிகரிப்பினதும் பொருட்களினதும் மற்றும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகளில் ஏற்பட்ட ரூ. 42 பில்லியன் கொண்ட அதிகரிப்பினதும் கூட்டுத்தொகை ஆகும். பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் 1992 இன் 20.6 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 1993 இல் 24.1 சதவீதத்தால் அதிகரித்தன. 1993 இல் உண்மை நியதிகளில் கிடைக்கத்தக்க மூலவளங்கள் 9.3 சதவீதத்தால் அதிகரித்தன.

அட்டவணை 1.8

**நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1982 | 1991* | 1992* | 1993* |
|---|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொ. உ. உ. | 99,238 | 372,345 | 425,283 | 496,485 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 11,770 | 47,498 | 63,845 | 80,184 |
| 3. தேறிய காரணி வருமானம் | -1,959 | -7,367 | -7,821 | -5,757 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தனியார் மாற்றங்கள் | 5,494 | 16,623 | 20,253 | 27,090 |
| 5. தேசிய சேமிப்புக்கள் | 15,305 | 56,754 | 76,277 | 101,517 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 2) | 11.9 | 12.8 | 15.0 | 16.2 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 5) | 15.4 | 15.2 | 17.9 | 20.4 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

* தற்காலிகமானவை

பொருளாதாரத்திற்குக் கிடைத்த மொத்த மூலவளங்களில் 58.4 சதவீதம் நுகரப்பட்டு, 17.9 சதவீதம் முதலிடப்பட்டு 23.7 சதவீதம் ஏற்றுமதி செய்யப்பட்டது. பொருட்களினதும் மற்றும் காரணியல்லாப் பணிகளினதும் மொத்த ஏற்றுமதிகள் 1992 இன் 26.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 25.0 சதவீதத்தால் அதிகரித்தன. 1993 இல் நுகர்வு 15.2 சதவீதத்தால் அதிகரித்து, 1992 இல் ஏற்பட்ட 11.3 சதவீத அதிகரிப்பைவிடக் கணிசமான உயர்வீதத்தில் இருந்தது. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம், இருப்புக்களின் மாற்றம் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1992 இன் 21.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 பெயரளவு நியதிகளில் 23.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 1993 இல் உண்மை நியதிகளில் நுகர்வு 7 சதவீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பாக வேளாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பும் இறக்குமதிகளின் அதிகரித்துச் செல்லும் மட்டமும் உண்மை நுகர்வின் வளர்ச்சிக்கு வழிசெய்தன. 1993 இல் உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 12.6 சதவீதத்தால் அதிகரித்தது. பாரிய முதலீட்டுத்துறைகளாக கட்டடவாக்கம், போக்குவரத்துக் கருவிகள், தொடர்பூட்டல் பொறித்தொகுதி என்பன விளங்கின.